# I C 38 – TAMIL HINTS

## காப்பீட்டின் அடிப்படை

காப்பீடு தொட்டு உணர முடியாதது

சிலருக்கு ஏற்படும் அபாயங்களை பலர் பகிர்ந்துகொள்ளுதல்

காப்பீட்டின் உருவாக்கம் எதனால் வந்தது - இழப்பு நேருதலால்

ஊகிக்ககூடிய அபாயங்களை காப்பீடு செய்ய முடியாது

நாளடையில் பயன்பாடு காரணமாக பழுது ஆவதையோ [அ] வயது முதிர்ந்து இறப்பதையோ அபாயம் என்று கூற முடியாது

காப்பீடு - காப்பீடு பெறுபவர் அபாயத்தினை காப்பீட்டு நிறுவனத்திற்கு கை மாற்றுகின்றார்

தனி நபர் காப்பீடு வாங்குதல் - அபாயத்தினை காப்பீட்டு நிறுவனத்திற்க்கு கைமாற்றுதல்

அபாயத்தினை கை மாற்றுவதால் மன நிம்மதி ஏற்படுகின்றது

அபாயத்தினை கை மாற்றுவதை தவிர்ப்பவர்கள், அபாயத்தினை தானே தாங்கிக்கொள்ள முடிவு செய்கின்றனர்

காப்பீட்டின் பயன் - சொத்திற்கு அபாயம் [அ] இடரினால் ஏற்படும் நிதி இழப்புகளின் தாக்கத்தினை காப்பீடு பெற்றவர் குறைத்துக்கொள்கிறார்

காப்பீட்டின் பிறப்பிடம் - லாயிட்ஸ் காபி ஹவுஸ்

காப்பீட்டின் ஆரம்பம் - லாயிட்ஸ் காப்பி ஹவுஸ் - கடல் கடந்து வாணிகம் செய்தவர்கள் கடல் சீற்றம் / கடல் கொள்ளையர்களார் ஏற்படும் இழப்பினை பகிர்ந்து கொள்ள முடிவு செய்தல்

மனித வாழ்வின் மதிப்பு [ HUMAN LIFE VALUE ] வடிவமைத்தவர் பேராசிரியர் ஹ்யூப்னர்

மனித வாழ்வின் மதிப்பு [ HUMAN LIFE VALUE ] காப்பீடு வழங்க நிறுவனங்கள் பின்பற்றும் பாரம்பரிய முறை

## காப்பீட்டு முகவாண்மை

முகவராக பணியாற்ற குறைந்த பட்ச கல்வி தகுதி - 10ம் வகுப்பு

முகவர் என்பவர் காப்பீட்டு நிறுவனத்தின் பிரதிநிதி ஆவார்

புரோக்கர் என்பவர் காப்பீடு வேண்டுபவரின் பிரதிநிதி ஆவார்

கலவை காப்பீட்டு முகவர் [ COMPOSITE AGENT ] - ஆயுள் மற்றும் பொதுக்காப்பீட்டு முகவர் - 75 மணி நேர பயிற்சி

ஆயுள் காப்பீட்டு முகவர் 50 மணி நேர பயிற்சி

தகுதித் தேர்வில் தேர்ச்சி - தேர்ச்சி பெற்று 12 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

LETTER OF APPOINTMENT அந்தந்த காப்பீட்டு நிறுவனத்தால் வழங்கப்படும். ஆயுட்காலத்திற்கு செல்லுபடியாகும்

முகவரின் நேர்மை, மனப்பாங்கு, நேரம் தவறாமை ஆகிய குண நலன்களுக்கு அறிவுக்கூர்மை தேவை இல்லை

காப்பீடு பெறுபவர் கேட்கும் நிலையில் முகவர் கமிஷன் பற்றிய விபரத்தை கூற வேண்டும்

## காப்பீடு - சட்டபூர்வ அங்கீகாரம்

காப்பீடு கோருபவர் & காப்பீட்டு நிறுவனத்தின் இடையே உள்ள ஒப்பந்தம்

இந்திய ஒப்பந்த சட்டத்தின் ஷரத்துக்கள் பொருந்தும்

ஒப்பந்தத்தில் கையொப்பமிடுபவர் - வயது முதிர்ந்தவராகவும் - குற்றப்பிண்ணனி இல்லாமலும் - மனநிலை சரியாக இருப்பவருமாக இருக்க வேண்டும்

ஆயுள் காப்பீட்டு ஒப்பந்தங்கள் - உறுதியளிக்கப்பட்ட ஒப்பந்தங்கள்

பொதுக்காப்பீட்டு ஒப்பந்தங்கள் - ஈட்டுறுதி ஒப்பந்தங்கள்

ஒப்பந்தத்தில் தவறான தகவல் [MISREPRESENTATION] என்பது தவறான நோக்கமின்றி அளித்ததாக கருதப்படும்

ஒரு ஒப்பந்தத்தில் சட்ட விரோத அழுத்தம் காரணமாக [ **COERSION** ] கையெழுத்திடுவது கூடாது

**ஆள் மாறாட்டம்** ஆயுள் காப்பீட்டு ஒப்பந்தத்தில் மோசடியாக கருதப்படும்

பிரிமியம் என்பது காப்பீடு பெறுவதற்காக பாலிசிதாரர் செலுத்தும் தொகை

காப்பீட்டு ஒப்பந்தத்தில் பிரிமியம் என்பது காப்பீடு கோருபவரால் காப்பீட்டு நிறுவனத்திற்கு வழங்கப்படும் " **கருதுகை** " **[CONSIDERATION]**

லஞ்சம் - செல்லுபடியாகாத கருதுகை

**அதீத நன்னம்பிக்கை தத்துவம் [உபரிமா ஃபைட்ஸ்]** - முன்மொழிவு படிவத்தில் கேட்கப்பட்ட அனைத்து கேள்விகளுக்கும் சரியான பதில் அளிப்பது

**அதீத நன்னம்பிக்கை தத்துவம் [உபரிமா ஃபைட்ஸ்]** - காப்பீடு பெறுபவர் & காப்பீட்டு நிறுவனம் ஆகிய இருவரும் பின்பற்ற வேண்டும்

ஆயுள் காப்பீட்டு ஒப்பந்தத்தில் **காப்பீட்டு பற்று** காப்பீடு எடுக்கும் நேரத்தில் இருக்க வேண்டும்

நண்பர்கள் பெயரில் காப்பீடு வாங்க முடியாது - காப்பீட்டு பற்று இல்லை

**ஈட்டுறுதி கோட்பாடு** - காப்பீடு செய்யப்பட்ட தொகை வரை காப்பீடு பெற்றவர் அடைந்த இழப்பினை ஈடு செய்வது

## காப்பீடு - ஒழுங்கு முறை அமைப்பும் குறைதீர் அமைப்புகளும்

மூலதன சந்தையினை ஒழுங்கு படுத்தும் அமைப்பு **S E B I**

காப்பீட்டு நிறுவனங்களை ஒழுங்குபடுத்தும் அமைப்பு - **I R D A I** - தொடங்கப்பட்ட ஆண்டு ஏப்ரல் 2000

**காப்பீட்டு சட்டம் 1938** - அமலுக்கு வந்தது ஜூன் 1, 1939

காப்பீடு பெற்றவர் & நிறுவனம் இடையிலான தகறாறுகளை **குறைதீர் அதிகாரி [INSURANCE OMBUDSMAN]** விசாரித்து தீர்ப்பளிகின்றார்

**ஆம்புட்ஸ் மேன் அதிகாரம்** - பிராந்திய எல்லைக்கு உட்பட்டது

**ஆம்புட்ஸ் மேன் விசாரணை அதிகாரம்** - ஈடு கோரல் 20 லட்சம் வரை

**ஆம்புட்ஸ் மேன் விசாரணை கால வரம்பு** : ஈடு கோரல் மறுக்கப்பட்டு ஒரு ஆண்டிற்குள்

**விண்ணப்பிக்கும் முறை** - சாதாரண வெள்ளைத்தாளில் விண்ணப்பம்

**கட்டணம்** - கிடையாது

தனியார் காப்பீட்டு நிறுவனத்திற்கு எதிராகவும் புகாரளிக்கலாம்

**ஆம்புட்ஸ் மேன் அதிகாரத்திற்கு மேல் உள்ள அமைப்புகள்**

**மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம்** - ஈடு கோரல் 20 லட்சம் வரை

**மாநில நுகர்வோர் நீதிமன்றம்** - ஈடு கோரல் 20 லட்சத்திற்கு மேல் ஒரு கோடிக்குள்

**தேசிய நுகர்வோர் நீதிமன்றம்** - 1 கோடி & அதற்கு மேல்

I G M S - INTEGRATED GRIEVANCE MANAGEMENT SYSTEM - ஒருங்கிணைந்த குறைதீர் மேலாண்மை அமைப்பு - **ஐ ஆர் டி ஏ** வலைத்தளத்தில் உள்ளது

காப்பீட்டு நிறுவனத்தைப்பற்றி மேற்படி அமைப்பு மூலம் ஐ.ஆர்.டி.ஏ விடம் பாலிசிதாரர் புகாரளிக்கலாம்

## ஆயுள் காப்பீட்டு விற்பனை நடைமுறைகள்

**முன்மொழிவு படிவம்** - ஒப்பந்தத்திற்கான அடிப்படை ஆவணம்

**பாலிசி பத்திரம்** - காப்பீட்டு நிறுவனம் & காப்பீடு பெற்றவர் இருவரிடையே உள்ள ஒப்பந்தத்திற்கு சான்று

**முதற் பிரிமிய ரசீது** - ஆயுள் காப்பீடு தொடங்கி விட்டதற்கான சான்று

பாலிசி ஆவணத்தில், புரிந்து கொள்ள கடினமான, இரு பொருள் வரும்படியான வார்த்தை இருந்தால், காப்பீடு பெற்றவருக்கு சாதகமாக பொருள் கொள்ளப்படும்

வழக்கமான பாலிசி நிபந்தனை [அ] ஏற்பாடு - பாலிசி எடுத்து ஒரு வருடத்திற்குள் தற்கொலை செய்துகொண்டால் க்ளைம் மறுக்கப்படும்

குறிப்பிட்ட நிபந்தனை - கர்ப்பமாக இருக்கும் பெண் காப்பீடு கோரினால், மகப்பேறினால் ஏற்படும் இறப்பை மறுத்து  முன்மொழிவை ஏற்றுக்கொள்வது

சாதாரண / வழக்கமான பாலிசி ஆவணத்தின் [STANDARD POLICY DOCUMENT] முதல் பகுதி - அட்டவணை

பாலிசி ஆவணத்தின்  " தரமான விதிமுறைகள் " [ **ஸ்டாண்டர்டு கண்டிஷன்ஸ் & பிரிவிலேஜஸ்** ] பகுதியில் ஒப்பந்தத்தின் கீழ் பொருந்தும் விதிமுறைகளும் சலுகைகளும் குறிப்பிடப்பட்டு இருக்கும்.

**பாலிசி ஆவணம்** - தகுதியான அதிகாரியால் கையொப்பமிடப்பட்டு இந்திய முத்திரை சட்டப்படி முத்திரை இடப்பட்டிருக்க வேண்டும்

**அசல் பாலிசி ஆவணம் இழப்பு** - ஒப்பந்தத்தில் மாற்றம் செய்யாமல் நகல் பாலிசி வழங்கப்படும்

**பிரிமியம்** - காப்பீடு தொடங்கும் முன் செலுத்தப்பட வேண்டும்

**முதல் பிரிமிய இரசீது** - பாலிசி ஒப்பந்தம் தொடங்கி விட்டதற்கான சான்று

**முதல் பிரிமியத்திற்கு அடுத்தது** - புதுப்பிப்பு / ரெனிவல் பிரிமிய ரசீது

**உறுதியளிக்கப்பட்ட ஒப்படைப்பு மதிப்பு பெற** - 2 ஆண்டுகள் பிரிமியம் செலுத்தி இருக்கவேண்டும்

**பிரிவு** 39 - நியமனம் [ **நாமினேஷன்** ]

எத்துணை நபர்களை நியமனம் செய்யலாம் - ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டு

**நியமனத்தின் நோக்கம்** - காப்பீடு பெற்றவர் இறந்தால், இறப்பு உரிமத்தினை எளிதாகப்பெற

**அப்பாயிண்டி நியமனம்** - நியமிக்கப்பட்ட நபர் மைனராக இருப்பின்

பாலிசியில் கடன் பெறுவதற்காக காப்பீட்டு நிறுவனத்தின் பேரில் உரிமை மாற்றம் செய்தால் நாமினேஷன் ரத்து ஆகாது

**பிரிவு** 38 - உரிமை மாற்றம்

**உரிமை மாற்றத்தின் நோக்கம்** - பாலிசியின் உரிமைகளை இன்னொருவருக்கு மாற்றுதல்

பாலிசி எப்போது காலம் கடக்கின்றது [ **லேப்ஸ்** ] - சலுகை காலத்திற்குள் பிரிமியம் செலுத்தா விட்டால்

**சலுகை காலம்** - ஒரு மாதம் [அ] 31 நாட்கள் - எது அதிகமோ அது

**பாலிசியினை புதுப்பிக்கும் செயல்முறை** - உடல் நல சான்று + நிலுவை பிரிமியங்கள் + வட்டி

பாலிசியின் விதிமுறைகள் [அ] நிபந்தனைகள் மாற்றப்பட வேண்டுமெனில், மேற்குறிப்பு மூலம் மாற்றலாம்.

மேற்குறிப்பு [ ENDORSEMENT ] : பாலிசி & படிவங்களோடு இணைக்கப்படுகின்றது

அனுமதிக்கப்பட்ட மாற்றம் - ஒரு பாலிசியினை 02 அல்லது 03 பாலிசிகளாக பிரித்தல்.

**இலவச பார்வை காலம்**

பாலிசி தாரர் பாலிசி வாங்கி அதன் சட்ட திட்டங்கள் தனக்கு ஒப்புதல் இல்லை என்று அதை காப்பீட்டு நிறுவனத்திடம் திரும்ப ஒப்படைத்து பணத்தை பெற்றுக்கொள்ளும் நடைமுறை

பாலிசி பத்திரம் பெற்று 15 **நாட்களுக்குள்** இந்த சலுகையினை பயன்படுத்த வேண்டும்

**பிடித்தம் செய்யப்படும் தொகைகள்** - மருத்துவ அறிக்கை செலவு + முத்திரை தீர்வு செலவு + விகிதாச்சார முறையில் காப்பீடு அளிக்கப்பட்ட காலத்திற்கு உண்டான பிரிமியம்

**பணச்சலவை** - MONEYLAUNĐERING - சட்ட விரோதமான பணத்தை அதன் சட்ட விரோதமான மூலத்தை மறைத்து சட்ட ரீதியாக வந்தது போல செய்வது

முகவர் ரகசிய அறிக்கையில் காப்பீடு வேண்டுபவரின் உடல் ஆரோக்கியம், பழக்க வழக்கங்கள், தொழில் & வருமானம் ஆகியவைகளை குறிப்பிட வேண்டும்

காப்பீட்டு நிறுவனம் ஈட்டும் வட்டி விகிதத்தின் தாக்கம் பிரிமியத்தில் இருக்கும். அதிக வட்டி விகிதம் ...குறைவான பிரிமியம்

காப்பீட்டு நிறுவனம் வழங்கும் அதிக காப்பீட்டு தொகைக்கான தள்ளுபடி & தவணை முறைக்கான தள்ளுபடிகள் பிரிமியத்தை குறைவாக செலுத்த உதவும் உத்திகள்

**காப்பீட்டு ஏற்பு [ UNDERWRITING ]**

எப்போதும் முதன்மை " காப்பீட்டு ஏற்பாளர் " ஆயுள் காப்பீட்டு முகவர்தான்

**காப்பீட்டு ஏற்பாளரின் பங்கு** - அபாயத்தினை வகைப்படுத்தி ஏற்றுக்கொள்ளும் முடிவு எடுத்தல்

**விரும்பப்பட்ட வாழ்வுகள் / அபாயங்கள் [ PREFERRED LIVES ] :** காப்பீட்டாளர் பின்பற்றும் இறப்பு விகித அட்டவணையைவிட குறைவான இறப்புகள் நிகழும் ஆயுள்கள்

**தரமான ஆயுள்கள் / அபாயங்கள் [ STANDARD LIVES / RISK ] :** காப்பீட்டாளர் பின்பற்றும் இறப்பு விகிய அட்டவணையை ஒத்த இறப்புகள் நிகழும் ஆயுள்கள்.

**தரம் குறைந்த ஆயுள்கள் / அபாயங்கள் [ SUB STANDARD LIVES ]** காப்பீட்டாளர் பின்பற்றும் இறப்பு விகித அட்டவணையை விட அதிக இறப்புகள் நிகழும் ஆயுள்கள்

மேற்கண்ட மூன்று வகை ஆயுள்கள், உடல் நல காப்பீட்டிற்கும்பொருந்தும். இறப்பு விகித அட்டவணையை **[ MORTALITY TABLE ]** , உடல் நலம் குன்றும் விகிய அட்டவணை **[ MORBIDITY TABLE ]** REPLACE செய்யும்

பாலிசி பிரிமியம் & பாலிசி வடிவமைப்பு ஆகியவை **ஆக்ச்சுவரி** கணக்கிடுகின்றார்

முன்மொழிவு சமர்ப்பித்து 15 **நாட்களுக்குள்** காப்பீட்டு ஏற்பாளர் முடிவை தெரிவிக்க வேண்டும்

வேலையினால் ஆரோக்கிய நல பாதிப்பிற்கு ஆளாகுபவர்கள் : சுரங்க தூசியில் வேலை / கட்டிட இடிப்பு வேலை செய்பவர்கள்

வயதிற்கும் இறப்பிற்கும் தொடர்பு உடையதால், இளைஞர்களுக்கு குறைவான பிரிமியமும், வயது மூத்தவர்களுக்கு அதிகமான பிரிமியமும் வசூலிக்கப்படுகின்றது

**தரமான வயது நிருபணச்சான்று** - பள்ளிச்சான்றிதழ் - பாஸ்போர்ட் - பிறப்பு சான்றிதழ்

**தரமில்லாத வயது நிருபண சான்று [ SUB STANDARD AGE PROOF ]** : ஜாதகம்

**மீள் உரிமை [ LEAN ] :** குறிப்பிட்ட காலத்திற்குள் உடல் நலம் குன்றி இறப்பு ஏற்பட்டால் குறைக்கப்பட்ட ஈடு கோரல் அளிக்கப்படுவது

காப்பீட்டு தொகை பெரியதாக இருக்கும்போது மருத்துவபரிசோதனை நடத்தப்படுகின்றது

**மருத்துவர் அறிக்கையில் இடம்பெறுவது** - உயரம், எடை & ரத்த அழுத்தம்

மருத்துவர் தான் விரும்பும் மருத்துவ அறிக்கை எல்லாம் கேட்க மாட்டார். காப்பீட்டு நிறுவனம் தரும் படிவத்தில் உள்ள விபரங்களை மட்டும் பரிசோதனை செய்வார் - உயரம் எடை & ரத்த அழுத்தம்

## ஈடு கோரல் [ CLAIM ]

**ஈடு கோரல்** : ஒப்பந்தத்தில் கூறப்பட்ட உறுதிக்கு ஏற்ப காப்பீட்டு நிறுவனம் நடந்து கொள்ளுதல்

சலுகை நாட்களில் இறப்பு ஏற்பட்டால் அந்த பாலிசி ஆண்டிற்கான நிலுவை பிரிமியங்களை கழித்துக்கொண்டு இறப்பு உரிமம் வழங்கப்படும்

முன்மொழிவில் இருக்கும் தகவல் உண்மையில்லை என்று பாலிசி ஒப்பந்தத்தை நிறுவனம் மறுப்பதற்கான கால அளவு - 03 **ஆண்டுகள்**

**காப்பீட்டு சட்டத்தின் பிரிவு 45 - இண்டிஸ்ப்யூட்டபிலிட்டி** - பாலிசி 3 ஆண்டுகள் முடித்திருந்தால், ஈடு கோரலை காப்பீட்டு நிறுவனம் மறுப்பதிலிருந்து பாதுகாக்கும்

**மரண ஈடு கோரல்** : நியமனதாரர் [அ] உரிமை மாற்றம் பெற்றவருக்கு வழங்கப்படும்

**முன்கூட்டியே எழும் இறப்பு ஈடு கோரல்** - பாலிசிதாரர் பாலிசி எடுத்து [அ] பாலிசியை புதுப்பித்து **மூன்று** ஆண்டுகளுக்குள் இறப்பு

ஈடு கோரல் தொடர்பான அனைத்து ஆவணங்களும் வழங்கப்பட்ட நிலையில் **30 நாட்களுக்குள்** ஈடு கோரல் வழங்கப்படவேண்டும் [அ] விசாரணைக்கு அழைக்கப்படவேண்டும்

விசாரணை ஆரம்பித்து **ஆறு மாதங்களுக்குள்** முடிக்க வேண்டும்

**M W P பாலிசி** இறப்பு உரிமம் - அறங்காவலர் வசம் தரப்படும்

**M W P பாலிசி** முதிர்வு உரிமம் - அறங்காவலர் வசம் தரப்படும்

**M W P பாலிசி** - சிறப்பு அறங்காவலரை நியமிக்கா விட்டால் - ஈடு கோரல் தொகை மாநில அரசின் அதிகாரபூர்வமான அறங்காவலர் வசம் தரப்படும்

விபத்தினால் மரணத்திற்கு தேவைப்படும் கூடுதல் ஆவணங்கள் : முதல் தகவல் அறிக்கை + பிரேத பரிசோதனை அறிக்கை + காவல் விசாரணை அறிக்கை

பாலிசியில் காப்பீட்டுத்தொகையின் குறிப்பிட்ட சதவீதமாக போனஸ் வழங்கப்படும்

காணாமற் போனவர் இறந்ததாக அனுமானிக்கப்படுவது **ஏழு ஆண்டுகளுக்குப்பின்.** அதுவரை பாலிசியில் பிரிமியம் செலுத்த வேண்டும்

காப்பீட்டு நிறுவனத்தால் ஈடு கோரல் வழங்குவது தாமதம் ஆனால் **வங்கி வட்டிவிகிதம்** + 2% சேர்த்து வழங்க வேண்டும்

## உடல் நல காப்பீடு

உடல் நல காப்பீடு - நோயுற்றல் நிலை அடிப்படையில் அமைகின்றது

அபாய ஏற்பளிப்பு [UNDERWRITING] : அபாய தேர்வு & அபாய விலையிடுதல் ஏற்பளிப்பு எனப்படும்

**எதிர் தேர்வு** : இழப்பினை அனுபவிக்கும் வாய்ப்பு இருப்பது தெரிந்தே காப்பீடு வாங்குவது [அ] காப்பீடு வாங்க செய்யும் செயல்முறை

மது / புகையிலை : நோயுற்றல் நிலை அபாயத்தினை அதிகரிக்கும்

தனி நபர் உடல் நல காப்பீடு - சில்லறை வாடிக்கையாளர்களுக்கு

குழு உடல் நல காப்பீடு - பெரு நிறுவனங்களின் ஊழியர்களுக்கு

பகல் நேர பராமரிப்பு [DAY CARE] : கண் புரை அறுவை சிகிச்சை, டயாலிஸிஸ், கீமோதெரப்பி போன்றவை அடங்கும்

T P A [ THIRD PARTY ADMINISTRATOR ] : காப்பீட்டு நிறுவனம், மருத்துவமனை & நோயாளியை ஒருங்கிணைத்து காப்பீட்டு நிறுவனத்திற்கு நிர்வாக சேவை வழங்குபவர்

**ரொக்கமில்லா வசதி** : பாலிசிதாரர் பணம் செலுத்துவதில்லை - வலையமைப்பு மருத்துவமனை மூன்றாம் தரப்பு நிர்வாகியிடம் [ T P A ] ஆவணங்களை சமர்பித்து பணம் பெறுகின்றது

**ஈட்டுறுதி ஈடு கோரல் [ ரீஇம்பர்ஸ்மெண்ட் ]** பணத்தினை செலுத்திவிட்டு மூன்றாம் தரப்பு நிர்வாகியிடம் ஆவணங்களை சமர்ப்பித்து ஈடு கோரல் பெறுவது

**நிலைமை தாள் [CASE SHEET]** : மருத்துவமனையில் பராமரிக்கப்படும் உள் நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சை பற்றி விவரிக்கின்றது

**வெளியேறுதல் சுருக்க உரை [ டிஸ்சார்ஜ் சம்மரி ]** : நோயாளியின் பெயர், வயது, பாலினம் , அனுமதி & வெளியேறும் தேதி, சிகிச்சை விபரங்கள், நோயளியின் தற்போதைய நிலை ஆகியவை குறிப்பிடப்பட்டிருக்கும்.

காப்பீட்டு தொகை பெரியதாக இருப்பின் மருத்துவ பரிசோதனை நடத்தப்படுகின்றது

**காத்திருக்கும் காலம் ஏன் விதிக்கப்படுகிறது** : ஏற்கனவே உள்ள நோய் காரணமாக

குடும்ப பெயர்ச்சி பாலிசி [ FAMILY FLOATER POLICY ] குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் ஒரே பாலிசியில் உடல் நல காப்பீடு கிடைக்கும்

மாமா அத்தை அக்காள் தம்பி போன்ற உறவுகளுக்கு FAMILY FLOATER POLICY இல் காப்பீடு கிடைக்காது

**மருத்துவமனை சேர்க்கைக்கு முந்தைய செலவுகள்** : பொதுவாக உடல் நல காப்பீட்டில் சேர்க்கைக்கு 30 **நாட்கள்** முன்பு வரை அனுமதிக்கப்படும்

மருத்துவமனை சேர்க்கைக்கு முந்தைய & பிந்தைய செலவுகளுக்கு காப்பீடு அளிக்கப்படும்

P P N - PREFERRED PROVIDER NETWORK - விருப்ப வழங்குனர் வலையமைப்பு - இந்த மருத்துவமனைகளில் ரொக்கமில்லா சேவையினை பெற்றுக்கொள்ளலாம்

## தனி மனித நிதி மேலாண்மை

பண மதிப்பு கோணத்தில் காப்பீட்டு ஒப்பந்தத்தில் உள்ள குறைபாடு - குறைவான லாபம் / வளர்ச்சி

பண மதிப்பு கோணத்தில் காப்பீட்டு ஒப்பந்தத்தில் உள்ள நன்மை - பாதுகாப்பான முதலீடு - சேமிப்பு ஒழுக்கம் - வருமான வரி சலுகை

**பண வீக்கம்** - காலப்போக்கில் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை உயர்வு

**NET WORTH** = ASSET - LIABILITY

தனி நபர் தன்னுடைய நீண்டகாலசேமிப்பு [அ] முதலீட்டினை போற்றும் நேரம் - பணி நிறைவுக்குப்பின் ஓய்வு காலத்தில்

தனி நபர் நிதி மேலாண்மை தொடங்க நல்ல தருணம் - **முதல் சம்பளம் பெற்றதும்**

**காப்பீட்டினை வாங்குவதன் நோக்கம்** - அபயத்தை கை மாற்றுதல் & நிச்சயமின்மைக்கு எதிரான பாதுகாப்பு

தனி நபர் நிதி திட்டமிடுதலில் " **செல்வக்குவிப்பு வகை சேமிப்புகள்** " - பங்கு சந்தை முதலீடு

தனி நபர் நிதி திட்டமிடுதலில் " **பரிவர்த்தனை வகை சேமிப்புகள்** " - வங்கி வைப்பு

தனி நபர் நிதி திட்டமிடுதலில் **தற்செயல் நிகழ்வு சமயத்தில் உதவும் சேமிப்பு** - காப்புறுதி

முதலீட்டு லாபத்திற்கும் வரம்பிற்கும் [காலம்] உள்ள தொடர்பு - காலம் அதிகமாக அதிகமாக லாபம் அதிகமாகும்

காப்பீட்டு பாலிசி ஏன் வாங்க வேண்டும் - தனி நபரின் பொருள் ஈட்டும் திறனில் ஏற்பட்ட இழப்பால் உண்டான பொருளாதார மதிப்பிழப்பிற்கு எதிரான பாதுகாப்பு

## காப்பீட்டு திட்டங்கள்

**காலவரை காப்பீட்டு திட்டம்** - குறைந்த பிரிமியத்தில் தேவையான காப்பீடு

**காலவரை காப்பீட்டு திட்டம்** - சேமிப்பு எதுவும் கிடையாது. முதிர்வின் போது பணப்பயன்கள் ஏதும் கிடையாது.

**காலவரை காப்பீட்டு திட்டம்** - வருமானம் அதிகம் இல்லாத ஆனால் காப்பீடு தேவைப்படும் நபர்களுக்கு உகந்தது

**காலவரை காப்பீட்டு திட்டம்** - தனி பாலிசியாகவோ [அ] மற்றொரு பாலிசியுடன் ரைடராகவோ எடுத்துக்கொள்ளலாம்

**எண்டோமெண்ட் திட்டம்** - உய்வு நன்மை [ மெச்சூரிட்டி ] & மரண நன்மை **[ இறப்பு நன்மை ]** இரண்டும் உள்ளன

**பண மீட்சி பாலிசி** - ஈடு கோரல் பணம் குறிப்பிட்ட கால அளவுகளில் வழங்கப்படும்

**பாரம்பரியம் இல்லாத ஆயுள் காப்புறுதி** - உலகளாவிய ஆயுள் காப்புறுதி

**யூனிட் இணைக்கப்பட்ட காப்புறுதி திட்டத்தின் [ யூலிப் ] அம்சங்கள்** - காப்பீட்டிற்கான பிரிமியம் / செலவுகள் & சேமிப்பு கூறுகள் பற்றிய வெளிப்படையான தகவல்கள் இருக்கும்

யூனிட் இணைக்கப்பட்ட காப்புறுதி திட்டத்தில் [ யூலிப் ] இறப்பு அபாயத்தை காப்பீட்டாளர் தாங்குகின்றார் - முதலீட்டு அபாயத்தை பாலிசிதாரர் தாங்குகின்றார்

**யூனிட் இணைக்கப்பட்ட காப்புறுதி திட்டத்தின் [ யூலிப் ] இறப்பு பயன்கள்** - காப்புறுதி தொகை [அ] நிதி மதிப்பு இதில் எது அதிகமோ அது வழங்கப்படும்

மாற்றத்தக்க பாலிசி மூலம் காலவரை பாலிசியை முழு ஆயுள் பாலிசியாக மாற்றிக்கொள்ளலாம்

**காப்பீட்டு விற்பனை - சில சிறப்பு பயன்பாடுகள்**

M W P சட்டத்தில் பிரிவு 6 பாலிசிதாரருக்கு பாதுகாப்பினை வழங்குகின்றது

**அடமான மீட்புக்கடன் பாலிசி**

சொத்தினை அடமானமாக வைத்து கடன் வழங்கப்பட்டு மேற்படி சொத்தினை கடன் வாங்கியவர்கள் பாதுகாப்பிலேயே விடும் நடைமுறை **அடமானக்கடன்** எனப்படும்

**M R I -** MORTGAGE REDEMPTION INSURANCE

வீட்டுக்கடன் பெறுபவர்களுக்கு நிதி சார்ந்த பாதுகாப்பு வழங்குகின்றது

குறைகின்ற காலவரை காப்பீட்டு வகையை சார்ந்தது

ஆண்டுகள் போகப்போக காப்பீட்டுத்தொகை குறைந்தாலும், செலுத்தும் பிரிமியம் நிலையானதாக இருக்கும்

**KEY MAN POLICY** [அ] பிரதான நபர் காப்பீடு

கீ மேன் என்பவர் வணிக நிறுவனத்தில் முக்கியமான நபர்

**KEY MAN பாலிசி**, வணிக நிறுவனத்தின் நன்மைக்காக எடுக்க்கபடுகின்றது

கீ மேன் இறப்பினால் ஏற்படும் லாப இழப்புகளை சரிக்கட்டுவதற்காக பாலிசி எடுக்கப்படுகின்றது

கீ மேன் இறப்பினால் ஏற்படும் விற்பனை / லாப இழப்புகளை வணிக நிறுவனத்திற்கு ஈடு செய்ய மேற்கண்ட பாலிசி எடுக்கப்படுகின்றது

கீ மேன் என்னும் நபருக்கு வழங்கப்படும் காப்பீட்டு தொகை வணிக நிறுவனத்தின் லாபத்துடன் தொடர்புடையது

**வரிச்சலுகை -** பிரிமியங்கள் வணிக செலவாக கருதப்பட்டு லாபத்தில் இருந்து கழித்துக்கொள்ள அனுமதிக்கப்படும்

**பாலிசி எடுக்க சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்** - தணிக்கை செய்யப்பட்ட நிறுவனத்தின் நிதி அறிக்கைகள் & தாக்கல் செய்யப்பட்ட வருமான வரி ஆவணங்கள்